**செம்பாக்கம் நகராட்சியில் 29.10.2020ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணகூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் அக்டோபர் 2020 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.705 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.210/செ.ம.தொ.அ/2020 நாள்:15.8.2020ல் தினத்தந்தி நாளிதழில் தொழில் சிறப்பு மலரில் அரசுத்துறையின் விளம்பரங்கள் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப நிர்ணயிக்கபட்ட கட்டணங்களின் அடிப்படையில் வெளியிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் பேரில், இந்நகராட்சியின் ஓராண்டு சாதணையினை தினத்தந்தி நாளிதழ் சார்பில் வெளியிடப்படும் தொழில் மலரில் 240 சதுர செ.மீ அளவில் (கறுப்பு வெள்ளை நிறத்தில்) அரசு நிர்ணயம் செய்துள்ள கட்டண விகிதங்களின் அடிப்படையில் விளம்பரம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.25000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தினத்தந்தி நாளிதழ் தொழில் சிறப்பு மலரில் இந்நகராட்சியின் ஓராண்டு சாதணையினை விளம்பரம் செய்தமைக்கும், இதற்கான செலவினத் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.706 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 15.10.2020ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5, எம்.ஏ.வி. வசந்தம் அவென்யு, சங்கோதியம்மமன் கோயில் 4வது மற்றும் 5வது தெருவில் மழைநீர் வடிகால்வாயின் மீது மூடி அமைத்தல் பணி | 6.50 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.707** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 16.10.2020ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதியில் 130 இடங்களில் உள்ள சிறுமின்விசை மோட்டர்கள் பராமரிப்பு செய்தல் பணி | 5.00 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ஆர்.பி. கன்ஷ்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |
| 2 | வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் M Sand Bags விநியோகம் செய்தல் பணி | 2.00 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |
| 3 | செம்பாக்கம் நகராட்சியில் குளோரினேஷன் அமைப்புகளுக்கு தேவையான லிக்யூட் ஹைப்போ குளோரின் சப்ளை செய்தல் பணி | 3.00 | நோபில் இகோ சிஸ்டம்ஸ் பி லிட் | மதிப்பீட்டை விட 0.23% குறைவு |
| | | | வாடெக் இகோ சொலியூசன்ஸ் | மதிப்பீட்டை விட 19.05% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.708** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.5

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2020-21 மற்றும் 2021-22 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ராஜகீழ்பாக்கம் ஏரிக்கரை பகுதியில் அமைந்துள்ள மூன்று பொது கழிவறைகள், வேளச்சேரி சாலையில் அமைந்துள்ள ஒரு பொது கழிப்பறை மற்றும் அம்பேத்கார் தெருவில் அமைந்துள்ள சமுதாய கழிவறை ஆகியவற்றினை பராமரிப்பு | 6.00 |

| | | |
|---|---|---|
| | செய்தல் பணி. | |
| 2 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 12 எண்ணிக்கையிலான பூங்காக்களை காவல் பணிக்காக தேவைப்படும் பணியாட்களை சப்ளை செய்தல் பணி | 9.80 |

அலுவலக குறிப்பு :–

1. மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.709 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியில் துாய்மை பணியாளர்களாக பணிபுரிந்து வரும் திரு. மு. ரவி மற்றும் இதர 7 நபர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். 34704/2015ல் இந்நகராட்சி ஆணையாளரை 4வது பிரதி வாதியாக இணைக்கப்பட்டதற்கிணங்க இந்நகராட்சி சார்பாக திரு. பி. ஸ்ரீநிவாஸ், வழக்கறிஞர் மூலம் வக்காளத்து வழங்கப்பட்டு, பத்திவாரியான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது. மேலும் இவ்வழக்கினை தொடர்ந்து நடத்திட வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15000/– செலுத்த கோரி திரு. பி. ஸ்ரீநிவாஸ், வழக்கறிஞரிடமிருந்து வரப்பெற்ற 16.10.2020ம் தேதியிட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழக்கறிஞர் கட்டணம் செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.710 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பணியாற்றும் 16 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களுக்கு, ஓட்டுநர்கள் 2 எண்ணிக்கை மற்றும் 1 அலுவலக உதவியாளர் ஆகியோருக்கு சீருடைகள் வழங்கிடவும், அவற்றை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கம் லிட் (Co-optex) சென்னை 8 நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்துக் கொள்ளவும் விலைப்பட்டியலின் படி தொகை அந்நிறுவனத்திற்கு காசோலை மூலம் வழங்கி சீருடை பெற்று பணியாளர்களுக்கு வழங்கிடவும், மற்றும் தையற் கூலி உட்பட இதற்கான தேராய செலவின மதிப்பீடு தொகை ரூ.100000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கம் லிட் நிறுவனத்திடமிருந்து சீருடை பெற்று வழங்கிடவும், மற்றும் தையற்கூலி உட்பட இதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.711 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு

தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு **10** பேர் சேர்த்து **65** DBCக்களை (Outsourcing) நியமித்து பணி கொள்ள தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்த காலம் **13.10.2020**ம் தேதியுடன் முடிவடைவதால், எதிர் வரும் வடகிழக்கு பருவ மழைக்காலத்தினை முன்னிட்டு நோய் தொற்று ஏற்படாமல் பொது மக்களை பாதுகாக்க வேண்டி இப்பணியினை தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண். **690** நாள் **30.9.2020**ன் படி ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த காலதாமதம் ஏற்படும் வகையில், **31.10.2020** வரையான காலத்திற்கு. ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் அதே ஒப்பந்ததாரர் மூலம் பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும், இதற்கான தோராய செலவின தொகை ரூ.**5.56** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அங்கீகாரம் வழங்கலாம்.

**தீர்மான எண்.712 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சியில் **2020–21**ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் **21.10.2020**ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | சிட்லபாக்கம் பிரதான சாலையில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் பழுது பார்த்தல் பணி | 4.00 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.713 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

செம்பாக்கம் நகராட்சியில் **2020–21**ம் ஆண்டு நகராட்சி நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிக்கையினை மாவட்ட அளவிலான நாளிதழில் செய்தி மக்கள் தொடர்பு துறை வழியாக விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணத்தினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | தொகை வழங்க வேண்டிய நிறுவனத்தின பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | 2020–21ம் ஆண்டிற்கு கொசுபுழு ஒழிப்பு பணிக்கு Domestic Breeding Checkers ஒப்பந்த அடிப்படையில் (Out Source) 65 பணியாளர்கள் மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் தகுதியுடைய ஒப்பந்ததாரர் மூலம் சப்ளை செய்தல் பணி | ஆட்வேவ் அட்வர்டைசிங் பிரைவேட் லிட் நெ.9, சௌத் போக் ரோடு, தி. நகர், சென்னை 17 | ரூ. 14566/- |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விளம்பர கட்டணத் தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்தியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.714** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 23.10.2020ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2020–21ம் ஆண்டிற்கு கொசுபுழு ஒழிப்பு பணிக்கு Domestic Breeding Checkers ஒப்பந்த அடிப்படையில் (Out Source) 65 பணியாளர்கள் மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் தகுதியுடைய ஒப்பந்ததாரர் மூலம் சப்ளை செய்தல் பணி | 25.00 | S. Sekar & Co 21, Gangai Street, Balaji Nagar Rose Garden, East Tambaram, Chennai 59 | ரூ.457.50 குறைவு |
| | | | K. Krishnamurthy 7, Yamunai Street, Balaji Nagr, Irumbuliyur, Chennai 59 | ரூ.460.00 அதிகம் |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.715** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் வடகிழக்கு பருவமழை 2020

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நடைப்பெற்ற ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகள் படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வெள்ள நீரினால் பெருமளவில் பாதிப்பு ஏற்படும் பகுதிகளை கண்டறிந்து, அப்பகுதிகளில் நேரிடையாக சென்று வெள்ள நீர் வழிந்தோட வழிவகை செய்திடவும், மழைநீர் வடிகால்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை / தடுப்புகளை அகற்றி வெள்ள நீர் வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனை தொடர்ந்து கீழ்காணும் பகுதிகள் மழைநீரால் பாதிக்கப்படும் பகுதிகளாக கண்டறியப்பட்டு உடன் அப்பகுதியில் உள்ள கால்வாய்களை தூர் வாரி சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | தெருப்பெயர் |
|---|---|---|
| 1 | 11 | சிட்லபாக்கம் மெயின் ரோடு |
| 2 | 12 | வள்ளல் யூசப் நகர் மெயின் ரோடு |
| 3 | 1 | திருமலை நகர் மெயின் ரோடு |

மேற்படி பகுதிகளில் சாலையோரம் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயின் மீது கட்டிட உரிமையாளர்கள் / வணிக உரிமையாளர்களால் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக இவ்வலுவலக 12.10.2020ம் தேதியிட்ட அறிவிப்பு மூலம் 24 மணி நேரத்திற்குள் அகற்றிட கோரி அறிவிப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில், மேற்படி உரிமையாளர்கள் மூலம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் உள்ளதால், காவல் துறை ஒத்துழைப்புடன், இந்நகராட்சி மூலம் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி மழைநீர் வடிகால்வாய்களை தூர் வாரி சுத்தம் செய்தல் பணியினை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த காலதாமதம் ஏற்படும் வகையில், அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் ஒருவர் மூலம் மேற்கொள்ளவும், இதற்கான தோராய செலவின மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.716 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நட்சத்திர அந்தஸ்து (STAR RATING) வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக செம்பாக்கம் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி முறையே தரம் பிரித்து கையாளுப்பட்டு வருகிறுது. மேலும், இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் கையாளுதல் SECONDARY STORAGE AND TRANSPORTATION செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

எனவே, மத்திய அரசின் MOUD துறையின் மூலம் செம்பாக்கம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (THREE STAR RATING) பெற சுய உறுதி மொழி சான்றிதழுக்கு (Self Declaration) அறிவிப்பு

வெளியிடவும், இதற்கான தோராய விளம்பர கட்டணத் தொகையாக ரூ.20000/– ஆகும். மேலும், இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்ட பொருள் குறித்து பொது மக்களின் ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகளை பெறலாம். இறுதி செய்யப்பட்ட சுய உறுதி மொழி சான்றிதழை பிரசுரம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. பிரசுரம் செய்வதற்கான கட்டணத் தொகை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.717 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு பொது நிதி 2020-21-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ராஜகீழ்பாக்கம் ஏரிக்கரை பகுதியில் அமைந்துள்ள மூன்று பொது கழிவறைகள், வேளச்சேரி சாலையில் அமைந்துள்ள ஒரு பொது கழிப்பறை மற்றும் அம்பேத்கார் தெருவில் அமைந்துள்ள சமுதாய கழிப்பறை ஆகியவற்றினை ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) சுத்தம் செய்து, பராமரித்தல் பணி. | 9.80 |

அலுவலக குறிப்பு :–

1. மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.718 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.8.2020 முதல் 31.8.2020 வரையான காலத்திற்கு இரு | 694400 |

| | | |
|---|---|---|
| | எண்ணிக்கையிலான டாடா ஏஸி வாகனத்தில் 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, உயர் அழுத்த மோட்டாருடன் கூடிய ஸ்பேரயர், வண்டி வாடகை, டீசல், இரண்டு நபர்களுக்கான நாள் ஊதியம், ஓட்டுநர் ஊதியம், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ் க்கு வழங்கியது | |
| 2 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.8.2020 முதல் 31.8.2020 வரையான காலத்திற்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆட்டோ மைக் செட் மூலம் விளம்பரம் செய்தது வண்டி வாடகை, எரிபொருள், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திருமதி. ஆர். சத்யா க்கு வழங்கியது | 55800 |
| 3 | கொரோனா தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் நோய் தொற்று எற்பட்ட பகுதிகளில் / கட்டிடங்களில் அவர்களை தனிமைபடுத்தி வைப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பு வேலி அமைத்ததல் பணி மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் அருணாச்சலம் இன்பிராஸ்ரக்ஷர் டெவலப்மண்ட நிறுவனத்திற்கு வழங்கியது. | 238656 |
| 4 | கொரோனா தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள பூங்காக்களை பொது மக்கள் மீண்டும் உபயோகப்படுத்தும் வகையில் சுத்தம் செய்து பராமரித்தல் பணி மேற்கொண்ட வகையில் ஷைன் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வழங்கியது | 499189 |

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.719 செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்.16

செம்பாக்கம் நகராட்சிக்கு கீழ்கண்ட பணிகளுக்கு ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 1.4.2020 முதல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான செலவின தொகை முழுவதும் முடிவடையும் நிலையில் உள்ளதால், தொடர்ந்து குடிநீர் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | ரூ.5.00 |
| 2 | வார்டு எண்.1 முதல் 7 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | ரூ.4.50 |

| | | |
|---|---|---|
| 3 | வார்டு எண்.8 முதல் 15 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | ரூ.4.50 |

அலுவலக குறிப்பு :–

1. மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.720** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை விதி 2016ன் படி மக்கும் குப்பைகளை நகராட்சி பகுதிக்குள்ளேயே இறுதியாக்கம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதைப்போல் மக்காத மறு சுழற்சி குப்பைகளான பிளாஸ்டிக் குப்பைகளை வாரம் ஒரு நாள் உள்ளூர் வியாபாரிகளிடம் விற்பனை செய்தது போக மீதமுள்ள விற்காத மறு உபயோகக் கழிவு பிளாஸ்டிக்குகளை எரியூட்ட கூடிய பிளாஸ்டிக் கழிவுகள், பேப்பர், பாட்டில்கள், பழைய துணிகள், டயர்கள் கொண்ட உலர் கழிவுகளை சென்னை பெருநகர மாநகராட்சி நிர்வாகம் தனது 6.8.2020ம் தேதியிய கடிதம் மூலம் பெருங்குடி குப்பை கிடங்கில் இந்நகராட்சியின் உலர் கழிவுகளை கொண்டு சேர்ப்பதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

மேலும், இந்நகராட்சியில் நாள்தோறும் உருவாகும் 10 முதல் 12 டன் வரை உலர் கழிவுகளை வேறு எங்கும் எடுத்து சென்று சேர்ப்பதற்கு வழிவகை இல்லாததால் பொது சுகாதார நலன் கருதி மற்றும் கொரோனா பெருந்தொற்று காலத்தில் குப்பைகளை தேங்க விடாமல் தொற்று நோய் பரவுவதை தடுக்கும் விதமாகவும், ஒரு முறை 7 முதல் 10 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை கொண்டு செல்வதற்கு ரூ.14000/– வீதம் (டிப்பர் லாரி வாடகை, டிரைவர் பேட்டா, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி மற்றும் இதர செலவினங்கள் உட்பட) கணக்கீடு செய்து, இதற்கான தோராய செலவினமாக ரூ.5.00 இலட்சத்திற்கு, இந்நகர் மன்ற தீர்மானம் எண்.688 நாள் 31.8.2020ன் படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அவசர அவசியம் கருதி உள்ளூர் வாகன உரிமையாளர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று, குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வாகன உரிமையாளர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் மேற்காணும் ஒதுக்கீடு தொகை முழுவதும் செலவினம் மேற்கொள்ளப்பட்ட நிலையில், உலர் கழிவுகளை தொடர்ந்து கையாள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகித அடிப்படையில் தொடர்ந்து பணி மேற்கொள்ளவும், இதற்கான தோராய செலவின மதிப்பீடாக ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.721** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகள் மற்றும் வாட்ஸ்ஆப் குறுஞ்செய்தியின் அடிப்படையில், செம்பாக்கம் நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ், நோய் தொற்று கண்ட கட்டுபாட்டு பகுதிகளில் (வீடுகளில்) Containment Zone / Barriguard Houses நோய் தொற்று ஏற்பட்ட நபர்கள் மற்றும் அவரை சார்ந்தவர்களின் நடமாட்டத்தை கட்டுபடுவதற்காகவும், தினசரி 70 கொரோனா மாதிரிகள்

எடுத்து அவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தவும், தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் செய்யவதற்காகவும் தன்னார்வலர்கள் நியமனம் செய்ய தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், இந்நகராட்சியில் கட்டுபாடு பகுதிகளில் நோய் தொற்றினை கட்டுபடுத்துவதற்கும், அத்தியாவசிய பொருட்களை விநியோகம் செய்யவதற்கும் தேவைக்கேற்ப தன்னார்வலர்களை, அரசாணை (நிலை) எண்.112 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள் 20.6.2020ல் சென்னை மாநகராட்சியில் நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் ஊக்கத் தொகையில் இந்நகராட்சி பகுதியில் வழங்கிடவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கலப்ட்டு மண்டலம் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின் படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இப்பணியினை மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.679 நாள் 31.8.2020 ன் படி ரூ.5.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

மேலும், குறுகிய காலத்தில் உடனடியாக தன்னார்வலர்களை தேர்வு செய்வது, அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளில் அவர்களின் பணிகளை கண்காணிப்பது மற்றும் அவர்களின் வருகைக்கேற்பவும், பணிதிறன் அடிப்படையில் ஊக்கத் தொகையினை நேரடியாக வங்கி கணக்கில் வழங்குவது, வங்கி கணக்கு இல்லாத தன்னார்வலர்களுக்கு ஊக்கத் தொகையினை நேரடியாக வழங்குவது ஆகிய பணிகளை செயல்படுத்துவது சாத்தியகூறு இல்லாத காரணத்தினால், இப்பணியினை நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் ஒருவர் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தொடர்ந்து நோய் தொற்று தீவிரம் அடைந்து வருவதை முன்னிட்டு, ஆய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலம் முழுமையான அளவில் தன்னார்வலர்களை தொடர்ந்து ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதால், இந்நகராட்சியில் ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகித அடிப்படையில் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும், ஒதுக்கீடு தொகை முழுவதும் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும், கூடுதலாக இத்தலைப்பிற்கு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.722** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.19**

செம்பாக்கம் நகராட்சியின் 2019-20ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நிர்வாக அறிக்கை உயர் அலுவலர்களுக்கு அனுப்பியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.723** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.20**

செம்பாக்கம் நகராட்சிக்கு கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றிற்கான நகர் மன்றம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் முடிவடைவதால், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீடு தொகை | அனுமதிக்க பட்ட தீர்மான எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.2 அம்பேத்கார் தெருவில் அமைப்பட்டுள்ள பொது கழிப்பிடம் ஒப்பந்த பணியாளர்கள் மூலம் பராமரித்தல் பணி | ரூ.3.00 | 549<br>31.10.2019 |
| 2 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 12 எண்ணிக்கையிலான பூங்காக்களை பராமரிப்பு பணிக்காக தேவைப்படும் பணியாளட்களை சப்ளை செய்தல் பணி | ரூ.9.80 | 576<br>29.11.2019 |

**அலுவலக குறிப்பு** கூடுதல் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.724** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி